## வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு – 2017

வரி மேன்முறயீட்டு ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு அலுவல்கள் தொடர்பான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. வரி மேன்முறையீட்டு ஆணைக் குழுவினால் 2017 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இவ் அறிக்கை திகதி வரை சமர்பித்திருக்கவில்லை இலங்கை சனநாயக சோசலிச அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கபட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்படுகள் தொடர்பான என அவதானிப்புகள் இவ் அறிக்கையில் அடங்கியுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிக் கூற்றுக்கள் சமர்பித்தல்

இந்த வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு 2011 ஏப்ரல் 23 திகதி நிறுவப்பட்டிருந்ததுடன் 2011 இன் 23 ஆம் இலக்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் ஏதேனும் வரிக் கட்டணம் அல்லது அறவீடுகள், விதித்தல் மற்றும் குறிப்பிட்ட விடயம் தொடர்பான அனைத்து மேன்முறையீடுகளை விசாரணை செய்யும் பொறுப்பு அந்த ஆணைக்குழுவிற்கு சாட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஆணைக்குழு நிறுவப்பட்ட சட்டத்தில் ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள் சமர்பித்தல் மற்றும் கணக்காய்வு தொடர்பாக ஏற்பாடுகள் அடங்கியிருக்கவில்லை. எனினும் ஆணைக்குழுவினால் 2011 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான நிதிக் கூற்றுக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமரபிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இவ் அறிக்கை திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்திருக்கவில்லை.

### 2.2 கணக்கு புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

ஆணைக்குழுவின் அலுவல்கள் இடையறாமல் பேணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு தொடர்பாக நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு அடிப்படையாக கொண்ட பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை. ஆணைக்குழுவை நடாத்தி செல்வதற்காக திறைசேரியின் 102 ஆம் இலக்க செலவுத் தலைப்பில் நிகழ்ச்சி திட்டம் இலக்கம் 1 இன் கருத்திட்டம் 03 இன் கீழ் முறையே ரூபா 57,177,000 இற்கான மற்றும் ரூபா 16,620,100 இற்கான தேறிய மீண்டு வரும் மற்றும் தேறிய மூலதன ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தது. அவ் ஏற்பாடுகளை பயன்படுத்தி ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மீண்டுவரும் செலவுகள் ரூபா 55,494,611 மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 5,725,389 என்பன மாதாந்த கணக்குப் பொழிப்பு மூலம் மேற்கூறிய கருத்திட்ட செலவு விடயங்களுக்கு வரவு வைத்து நிதி அமைச்சின் ஒதுக்கீட்டு கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**2.3 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலைத்திருத்தல்**

ஆணைக்குழுவினால் இறுதியாக தயாரித்திருந்த 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சொத்துக்கள் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 3,844,863 |
| நடைமுறை சொத்துக்கள் | 95,330,292 |
| மொத்த சொத்துக்கள் | 99,175,155 |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறை பொறுப்புக்கள் | 90,469.357 |
| நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | - |
| மிகை | 8,705,798 |
| மொத்த பொறுப்புக்கள் | 99,175,155 |
| மொத்த வருமானம் (திறைசேரிலிருந்து பெறுவனவு ரூபா 35,021,517 உட்பட) | 35,065,517 |
| மொத்த செலவு | 42,891,469 |
| பற்றாக்குறை | (7,825,952) |

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.ப 396 (ஈ) | வழங்கப்பட்ட ஆனால் பணம் பெறுவதற்காக சமர்பிக்கபடாத 6 மாதங்களை கடந்துள்ள கூட்டுத்தொகை ரூபா 32.612 தொகை பெறுமதியான 3 காசோலைகள் நிதிப்பிரமணங்களின் பிரகாரம் அரச வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 திகதி 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று முறைசார் விதமாக பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

2011 இன் 23 ஆம் இலக்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டத்தின் மூலம் வரி மேன்பாட்டு ஆணைக்குழு தாபிக்கப்பட்டிருந்ததுடன் ஏதேனும் வரியொன்று, கட்டணமொன்று, அல்லது தண்டமொன்று மற்றும் தொடர்புடைய விடயம் ஒன்று தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் ஏதேனும் தீர்மானம் ஒன்றின் மூலம் திருப்தி அடையாத ஏதேனும் ஒரு நபருக்கு ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்ய முடியும். அவ்வாறு கிடைக்கும் மேன்முறையீடுகளை ஆணைக்குழுவினால் விசாரணை மேற்கொண்டு முடிவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். கணக்காய்விற்கு பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2011 ஆண்டு முதல் 2018 ஜுன் 30 ஆம் திகதி வரை ஆணைக்குழுவுக்கு சமர்பிக்கப்பட்டிருந்த மேன்முறையீடுகள் மற்றும் அவற்றை முடிவு செய்தல் தொடர்பாக முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதனிக்கப்பட்டன.

(அ) 2011 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதிவரை ஆணைக்குழுவுக்கு கிடைத்திருந்த செல்லுபடியாகும் வரி மேன்முறையீடுகள் 504 தொகையில் 269 தொகை மேன்முறையீடுகள் 2018 ஜுன் 30 திகதி அளவிலும் விசாரணை மேற்கொண்டு தீர்ப்பு வழங்கியிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்கு சமர்பிக்கபட்ட தகவல்களின் பிரகாரம் மேன்முறையீடு விசாரணை செய்தல் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் முடிவு வழங்க வேண்டியிருந்த மேன்முறையீடுகள் 48 காணப்பட்ட போதிலும் அதனொடு தொடர்புடைய கருத்து முரண்பாட்டு தன்மையுள்ள வரித் தொகையின் கூட்டுத்தொகை ரூபா 9,632,738,035 தொகை ஆக காணப்பட்டது.

(இ) மேன்முறையீட்டை விசாரணை செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத வரி மேன்முறையீடுகள் 52 தொடர்பாக கருத்துமுரண்பாட்டு தன்மையுள்ள வரித் தொகை ரூபா 9,572,602,392 தொகை ஆகும்.

(ஈ) 2018 ஜுன் 30 திகதி அளவிலும் விசாரணைகள் ஆரம்பிக்கபட்டிருக்காத 2016,2017 மற்றும் 2018 ஆண்டில் பதிவு செய்திருந்த வரிமேன்முறையீடுகள் சுமார் 283 தொகை காணப்பட்டதுடன் அவற்றில் கருத்துமுரண்பாடு தன்மை ஏற்பட்டுள்ள வரித் தொகையின் கூட்டுத்தொகை சுமார் ரூபா 27,108,767,237 தொகை என அவதானிக்கப்பட்டது.

### 3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

2012 பெப்ரவரி 28 திகதி முதல் 2017 திசெம்பர் 19 திகதி வரையான காலப் பகுதி தொடர்பாக 18 சந்தர்பங்களில் வரி மேன்முறையீடுகளுக்கு முடிவுகள் வழங்கிய பின்னர் பணமாக மாற்றப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 57,033,050 தொகையான வங்கி பிணைமுறிகள் 2017 திசெம்பர் 31 திகதி வரை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பியிருக்கவில்லை.

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப் போது வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | **முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு பரப்பு** | **அவதானிப்பு** |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | கணக்கு புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை. |
| (ஆ) | நிலையான சொத்துக்களை கட்டுபாடு | நிலையான சொத்துக்கள் பதிவேடு முறைசார் விதமாக பேணப்படாமை. |
| (இ) | செயற்பாட்டு நிருவாகம் | பிணைமுறிகள் அவ்வப்போது பணமாக மாற்றப்பட்டு அனுப்பியிருக்காமை. |